TIPS FOR PARENTS

# Solving Problems at School




## பாடசாலையில் பிரச்சனைகளைத்தீர்த்தல்

பாடசாலையில் நடைபெறும் வேலைகள், இன்னொரு பிள்ளையுடன் தனது பிள்ளைக்கான உறவு அல்லது பிள்ளையினுடைய விசேட தேவைகள் போன்றவை பற்றிப் பெற்றோர்கள் சில சமயங்களிலே ஆசிரியரோடு பேச வேண்டி உள்ளது. இத்தகைய அழைப்புக்கள் பெற்றோர்களிடமிருந்து வருவது அனேகமான ஆசிரியர்களுக்குப் பழக்கமாகி விட்டதுடன் உங்கள் பிள்ளை பாடசாலையில் திறமையுடன் செயற்பட உதவுவதற்கும் அவர்கள் விரும்புகிறார்கள்.

### *கல்வியில் பெற்றோர்களும் பங்காளிகளாக*

தமது பிள்ளைகளின் கல்வியில் பிரதான பங்காளிகளாக இருக்குமாறு ஒன்ராறியோவில் பெற்றோர்கள் ஊக்குவிக்கப் படுகிறார்கள். இன்னும் சொல்வதாயின், தமது பிள்ளைகளின் கல்வி மற்றும் பாடசாலை சமூகம் ஆகியவற்றுடன் பெற்றோர்கள் ஈடுபடுவதற்கு உதவும் வண்ணம் கல்வி அமைச்சில் ஒரு பகுதி கூட ஒதுக்கி விடப் பட்டுள்ளது.

ஆனால் இந்த முறைமை சிலசமயங்களில் பயமுறுத்துவதாகவும் சிக்கலானதாகவும் கூட அமையலாம். உங்களுக்கு ஏதாயினும் ஒரு பிரச்சினை அல்லது சந்தேகம் ஏதாயினும் எழுந்தால், அதுபற்றி யாருடன் பேசுவது?

ஆசிரியருடன் தொலைபேசி மூலம் நீங்கள் பேசவிரும்பினால் பாடசாலை அலுவலகத்தினை அழைத்து செய்தி ஒன்றினை விட்டீர்களானால் ஆசிரியர் உங்களோடு தொடர்பு கொள்வார்.

ஆசிரியரை நீங்கள சந்திக்க விரும்பினீர்களாயின், பாடசாலை அலுவலகத்தினை அழைத்து ஆசிரியரைச் சந்திப்பதற்கான ஒழுங்கு ஒன்றினைச் செய்து தருமாறு கேளுங்கள். உங்கள் பிள்ளைக்கு மேலதிக உதவி அல்லது விசேட செயல் நிகழ்வுத் திட்டம் தேவை என எண்ணுவீர்களாயின் ஆசிரியர் மற்றும் பாடசாலையின் ஏனைய ஊழியருடன் சந்திக்க ஏற்பாடு செய்து தருமாறு கேளுங்கள். சில பாடசாலைகளில் மொழிபெயர்புக்கும் உதவுவதற்கும் ஆட்கள் உள்ளனர்.

பாடசாலை ஊழியருடன் பேசுவதற்கான சில உதவிக் குறிப்புகள் இதோ உள்ளன:

### *உங்கள் பிள்ளையுடன் பேசுங்கள்*

- தகவல் சேகரிக்க உதவக் கூடிய வகையில் உங்கள் பிள்ளையிடம் கேள்விகள் கேளுங்கள்.
- 'உனக்குக் கடினமாக உள்ளது என்ன.....?', ' என்ன நடந்தது எனச் சொல்வாயா....?' போன்ற 'திறந்த முடிவுடைய வினாக்களைக்' கேட்க முயலுங்கள்
- அவர் சொல்வதை உன்னிபுடன் கேட்பதுடன் மேலும் மேலும் கேள்விகள் கேளுங்கள்.

### *உங்கள் பிள்ளையின் ஆசிரியருடன் பேசுங்கள்*

- உங்கள் பிரச்சினைகள் பற்றியும் உங்கள் பிள்ளை எவ்வித உணர்வு காட்டுகிறார் என்பது பற்றியும் ஆசிரியருடன் பேசுங்கள்.
- 'என் பிள்ளை சொன்னார்..'. என்பது போன்ற குறிப்புக்களைப் பேச்சில் உபயோகிக்க முனையுங்கள்
- பாடசாலை கொள்கைகளையும் நடைமுறைகளையும் நீங்கள் விளங்கிக் கொள்ள உதவக் கூடிய வகையில் கேள்விகளைக் கேளுங்கள்.
- ஆசியரிரது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் செவிமடுங்கள்.
- உங்கள் பிள்ளை ஆசிரியரிடமிருந்தும் உங்களிடமிருந்தும் பெறும் செய்தி ஒரே தன்மையானதாக இருப்பதற்கு என்ன செய்யலாம் என்பது பற்றி ஆசிரியரிடம் பேசுங்கள்.
- ஆசிரியர் சொன்னது பற்றி சாவகாசமாகச் சிந்தியுங்கள். உடனடியாகத் தீர்மானம் ஒன்றினை நீங்கள் எடுக்கவேண்டிய அவசியமில்லை
- பிரச்சினைக்கான தீர்வு வேலை செய்வதனைக் கண்டீர்களாயின் ஆசிரியருடன் மீண்டும் பேசுவதற்குச் சம்மதம் தெரிவியுங்கள்

### *அதிபர் அல்லது உப அதிபருடன் பேசுங்கள்*

ஆசிரியரால் உங்களுக்கு உதவமுடியாவிட்டால் அதிபருடன் அல்லது உப-அதிபருடன் பேசுங்கள். அவர்களால் உங்களுக்கு நேரடியாக உதவமுடியும் அல்லது வேறு ஆசிரியர்களையோ அல்லது பாடசாலையில் உள்ள வேறு ஊழியர்களையோ இதில் சம்பந்தப் படுத்த முடியும்.

### *பாடசாலை மேலாளருடன் பேசுங்கள்*

அதன் பின்னரும் பிரச்சினை தீர்க்கப் படாவிட்டால் பாடசாலை மேலாளரின் உதவியை நாடுங்கள். பாடசாலையின் அதிபரோ அல்லது செயலாளரோ மேலாளரை எவ்விதம் தொடர்பு கொள்வது பற்றிச் சொல்வார்கள் அல்லது நீங்கள் கல்விச் சபையினது இணையதளதிலிருந்தும் தகவல் பெறமுடியும்.

### *ஞாபகத்தில் வைக்கவேண்டியவை:*

- தகவல் தெரிந்தவராயிருங்கள்: உங்கள் பாடசாலையினது கொள்கைகளை அறிந்து கொள்ளுங்கள்.
- பெற்றோர் ஆசிரியர் செவ்விகளுக்கும் மற்றும் நிகழ்ச்சிகளுக்கும் ஒழுங்காகச் செல்லுங்கள். நீங்களும் ஆசிரியரும் ஏற்கனவே சந்தித்திருந்தீர்களானால் பிரச்சினைகளுக்குச் சுலபமாகத் தீர்வு காண முடியும்.
- உங்கள் பிள்ளை சம்பந்தமாகப் பாடசாலை அழைக்கின்ற எல்லாக் கூட்டங்களுக்கும் தவறாது செல்லுங்கள்.(உ.ம். விசேடகல்வி, தநகதி(IEP) ,பாடசாலை ஒழுங்காட்சி)
- உங்களது பிரச்சினை இலகுவில் தீர்க்கப் பட முடியாதாயிருப்பின் முக்கியமான சந்திப்புகள் மற்றும் பேச்சு வாரத்தைகள் பற்றிச் சிறு குறிப்புக்களை எழுதி வையுங்கள்.
- ஆங்கிலத்தில் உங்கள் பிரச்சினையைத் தெளிவாக எடுத்து விளக்க முடியாது என உணர்வீர்களானால் மொழிபெயர்ப்பாளர் ஒருவரைக் கேட்டுப் பெறுங்கள்.
- எமது பிள்ளைகள் பற்றிய பிரச்சினைகள் எம் மனதினைப் பேதலிக்கச் செய்ய வல்லவை. மனதினை அமைதியாக வைத்திருங்கள். நீங்கள் அமைதியாக உங்கள் பிரச்சினைகளை எடுத்துச் சொல்வீர்களானால் மற்றவர்கள் அதனைக் கவனமாகக் கேட்க முன்வருவார்கள்.

### *மேலும் தகவல் பெறுவதற்கு:*

416-534-0100 ல் கல்விக்கான மக்களை அழையுங்கள் அல்லது இந்த உதவிக்குறிப்புத்தாளின் ஏனைய மொழிப் பிரதிகளை கீழ் உள்ள இணையதளத்தில் பெற்றுக்கொள்ளுங்கள் :
www.peopleforeducation.com

கல்வி அமைச்சின் இணையதளம்: www.edu.gov.on.ca பாருங்கள்.
வீடியோக்களுக்கும் பல மொழிகளில் தகவல் பெறுவதற்கும் பாருங்கள்;www.settlement.org/edguide

people for Education
BECAUSE EDUCATION MATTERS MOST

Copies are available in several languages at *www.peopleforeducation.com.*
For more information, call 416-534-0100 or email: *info@peopleforeducation.com*
© People for Education 2009
THE ONTARIO TRILLIUM FOUNDATION
LA FONDATION TRILLIUM DE L'ONTARIO
toronto community foundation